**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, SATHANKULAM**

| | | | |
|---|---|---|---|
| P.W.1 | பெயர் : கிளமெண்ட் சதீஷ்<br>த/பெ : | OS.No. 59/2024 | 04.02.2026 |

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பில் வா.சா.1 ன் குறுக்கு விசாரணை)

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் 7 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தெரியும். எனது தாத்தாவின் பெயர் பரஞ்சோதி நாடார். தபசில் சொத்தின் புல எண்.215/3A ஆகும். மேற்படி புல எண்ணில் மொத்த விஸ்தீரணம் 57 செண்ட் ஆகும். பிராது எத்தனை தபசிலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. 01.06.1985 தேதிய ஆவணத்தின்படி எத்தனை செண்டை சிலுவைதங்கம் என்பவர் எனது அப்பாவிற்கு விடுதலை பாகப்பத்திரம் மூலம் கொடுத்தான் என்று சொன்னால், 29 செண்ட் எழுதிக் கொடுத்தார். மேற்படி ஆவணத்திலுள்ள எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

15.02.1993 தேதிய ஆவணத்தின்படி எத்தனை செண்டை லூர்துநாடார் என்பவர் எனது அப்பாவிற்கு விடுதலை பாகப்பத்திரம் மூலம் கொடுத்தான் என்று சொன்னால், 29 செண்ட் எழுதிக் கொடுத்தார். மேற்படி 15.02.1993 தேதியிட்ட ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான். மேற்படி ஆவணத்தில மொத்த விஸ்தீரணமாக 58 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக பிராது தபசில் சொத்திற்குரிய வில்லங்கத்தை சரிபார்த்துக் கொண்டேனா என்றால் இல்லை. தபசில் சொத்திற்குரிய அசல் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.3 ஆவணத்தில் எனது தாத்தாவின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால், என்றால் இல்லை எனது தந்தை பெயர் உள்ளது. யோவான் நாடார் யாரென்று கேட்டால் எனது தாத்தாவின் அப்பா. யோவான் நாடாருக்கு சிலுவைபிச்சை என்ற மகன் உண்டா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. யோவான் நாடாருக்கு லூர்துநாடார் என்ற மகன் உண்டா என்றால் உண்டு. பரஞ்சோதி நாடார் மகன்தான் சிலுவைபிச்சை என்பதை காட்டுவதற்கு நான் பிறப்பு சான்றிதழ் ஏதாவது தாக்கால் செய்துள்ளேனா என்றால் இல்லை.

பிரதிவாதியை எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் தெரியும், அவர் அரசு வேலை கிடைத்ததும் பாண்டிசேரி சென்று விட்டார். பிரதிவாதி எனது உறவினர். பிராது தபசில் சொத்தினை நானும் எனது அம்மாவும் கூட்டாக அனுபவித்து வருகிறோமா என்றால் கூட்டாகத்தான் அனுபவித்து வருகிறோம். இந்த வழக்கின் அசல் ஆவணங்களை வைத்து நான் நிதி நிறுவத்தில் கடன் ஏதேனும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்துகள் எங்கள் அனுபவத்தில் இல்லை என்று சொன்னாலும் பிராது தபசில் சொத்துகள் எங்களிடம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனது அப்பா சிலுவைபிச்சை, எனது சித்தப்பா சிலுவைதங்கம், செலஸ்டின் ஆகிய மூவரும் எனது தாத்தாவின் வாரிசுகள் என்று சொன்னால் சரிதான். மேற்படி மூவரும் சேர்ந்து 25.01.1999 அன்று தபசில் சொத்தைப் பொறுத்து 39 $^{1/4}$ செண்டினை பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்களா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னாலும் நான் வழக்கிற்காக பொய் சாட்சி மொழிகிறேன் என்று சொன்னாலும் சரியல்ல.

10.07.2015 அன்று பிரதிவாதியின் சகோதரி நிர்மலாதேவி, பொன்னம்மாள் என்பவரிடமிருந்து 15 செண்ட் செட்டில்மெண்டாக பெற்றுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து பிரதிவாதியின் அனுவத்தில்தான் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தபசில் சொத்து பாகப்பிரிவினைபடி எனக்கு பாத்தியப்பட்டதில்லை என்று சொன்னாலும் என்னுடைய அனுபவத்தில் இல்லை என்று சொன்னாலும் நான்கோரியுள்ள பரிகாரம் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் நான் விளம்புகை பரிகாரம் கேட்காமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதான் எனது இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டது.

SIVA RAJESH M

Digitally signed by SIVA RAJESH M
Date: 2026.02.04 17:36:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தான்குளம்.